ஜே.ஆர்.மயூரனின்..

# மனப்பூக்கள்

(கவிதைத்தொகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tel- 077-5280345

# மனப்பூக்கள்

(கவிதைத் தொகுதி)

ஜே.ஆர்.மயூரன்

வெளியீடு :

மன்னார் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | மன்னார் தமிழ்ச்சங்கம். |
| தலைப்பு | : | மனப்பூக்கள் |
| பொருள் | : | கவிதை |
| ஆசிரியர் | : | ஜே.ஆர்.மயூரன் |
| முதற்பதிப்பு | : | கார்த்திகை – 2013 |
| பதிப்புரை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | மன்னார் தமிழ்ச் சங்கம் |
| பக்கங்கள் | : | 64 + xii |
| பிரதிகள் | : | 500 |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | த.சந்திரன் |
| விலை | : | ரூ. 200 /= |
| அச்சுப் பதிப்பு | : | ஸ்கை அச்சகம், மன்னார். |

| | | |
|---|---|---|
| Tittle | : | Manap Pookkal |
| Author | : | J.R.Mayooran |
| First edition | : | November 2013 |
| Publisher | : | Mannar Tamil Sankam. |
| Pages | : | 64 + xii |
| Copies | : | 500 |
| Front page Designins | : | T.Shandran |
| Price | : | Rs. 200 /= |
| Printers | : | Sky Printers, Mannar. |
| ISBN | : | 978-955-52528-2-9 |

நூலாசிரியருடைய தொடர்புகட்கு

பி.எம்.சி.றோட்,
சாவற்கட்டு,
மன்னார்.
தொ.பே.இல : 075 0519189

B.M.C Road,
Chavatkaddu,
Mannar,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் செயலாளர்
மன்னார் தமிழ்ச் சங்கம்
மன்னார் மாவட்டம்.

## சமர்ப்பணம்

மொழி தந்த தமிழாம்
தமிழ் கண்ட கவியாம்
கவி கொண்ட கல்வியாம்
கல்விக்கு களமிட்டவென்
பள்ளியாம்
(மன்/ புனித சவேரியார் ஆண்கள்
தேசிய பாடசாலை)
இந் நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை என்னும் கொடுமை மக்களை வாட்டுகிறது;

மனிதர் உணவை மனிதன் பறிக்கும் கொடுமை

எட்டுத்திக்கிலும் கூத்தாடுகிறது;

சாதிக்கொரு நீதி பேசும் நீசத்தனம்

நம்மில் நர்த்தனமாடுகிறது;

படித்தவன் சூதும் வாதும் பண்ணுகின்றான்.

-பாரதியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள் தழுவியவைகள்


1. மனப் பூக்கள்
2. உடைபடும் மௌனச் சிறை
3. காகிதத் துளைகள்
4. உயிரின் ஊன்றுகோல்
5. நீ வேறுபட்ட வேதம்
6. இதய முட்செடி
7. ஆயுத மனிதனே நில்...
8. பட்டினிக் கடவுளே
9. நிறமிழக்கா ஞாபகம்
10. ஒன்றுமில்லாத வொன்றிற்காய்
11. கடவுளும் அழுகிறார்
12. தெளிந்த சேறு
13. நேயம் கொழுவாத சட்டம்
14. முட்கம்பி
15. நிலப்பசிப் பச்சை
16. கசிவு
17. காலாவதி
18. முடிச்சுக்கு முன்னே
19. கைரேகை
20. உணர்வுத் துகள்கள்
21. மனச்சிறை
22. சில்லறை விரல் விழிகள்
23. உயிர்ப் பனி
24. (100 ற்கு - 99)
25. நரகத்தில் தீபாவளி
26. இளமையின் இன்பம்
27. நவீனம் சிரிக்கிறது.
28. சத்தமிடா உள்ளத்துப்பாக்கி
29. காதல் கற்கள்
30. போர்க்குழந்தைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. விஞ்ஞானத்திடம் ஒரு நாஸ்தீகன்
32. உயிர்ச்சுவர்
33. நாட்கள் எண்ணப்படுகின்றன
34. சிறைக்குருதி
35. விழிக்குள் விழுந்த பூ
36. மோக மழை
37. அழகின் வரியே
38. டிசம்பர் 21
39. சிவப்பெழுத்துக்கள்
40. நாற்காலிக்கு ஒரு கேள்வி
41. பொய் சிலம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

பிறந்தோம் வளர்ந்தோம்
இறந்தோம் மறைந்தோம் - என
வெந்ததை தின்று
விதிவந்தால் செத்து
பத்தோடு பதினொன்றாக
காணாமல் போகும் பலர் மத்தியில்

தம் வாழ்வின்
தம் வழியின்
தம் உழைப்பின்
தம் உயர்வின்
தம் கலையின்
தம் கவிதையின் கனதியை

கச்சிதமாக பதிவு செய்வோர் சிலரே. இச் சிலரின் வரிசையில் சிகரம் தொட கலைப்பயணம் தொடரும் இளங்கவிஞன் மயூரனின் மூன்றாவது கவிப்பிரசவமே இம் "மனப்பூக்கள்"

பாதைக்கு படிக்கட்டாய்
ஏற்றி விட்ட ஏணியாய்
கல்விக்கு அமுதூட்டிய - தன்
கலாசாலைக்கு இக்கவித்தொகுப்பை
காணிக்கையாக்கியுள்ள இக்கவிஞனை
பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நாற்பது கவிதைகளை - கவி
நந்தவனத்தில்
நறுமணம் வீச
இங்கே களமிறக்கி விட்டுள்ளார்
மயூரன்.
வார்த்தைகள் இவருக்கு
வசப்பட்டே வருகின்றன
வாரியிறைத்துள்ளார் அணிகலன்களாக
அதனாலோவென்னவோ அகராதி வைத்துத்தான்
அறியவேண்டியுள்ளது ஆழத்தை என
என் மனம் சொல்கிறது.

காதலை, காலத்தை, கலாச்சார சீரழிவை, உணர்வெழுச்சியை, உள்மன உறுத்தல்களை, வாலிப வலியை, வருத்தும் நவீன யுகத்தை, போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்ற எம் பெருமை, நம் பொருளாதார சிறுமை என வித வித பூக்களால் ஆரம் கட்டி அலங்கரிக்கப்பட்டுள்ளது மனப் பூக்கள்.

தாயின் தனிப்பெருஞ் சிறப்பை பாடாத கவியுள்ளம் தரணியில் இல்லை எனலாம். அவ்வகையில் "உயிரின் ஊன்றுகோல்" என்கிற கவிதையில்
"வயிற்றுப் பசி
தண்டவாளக் கம்பி துளைக்க
தன்னின்பம் மறைத்து
அடுப்பு வெப்பம் ருசித்த
வள்ளல் கொடி"

என்று தாயன்பிற்கு தங்கக் கிரீடம் சூட்டியுள்ளது மெய்சிலிர்ப்புக்குரியது.

"இதய முட்செடி" என்னும் கவிதையில்
"சுயநினைவிழந்து விடுவென
கவலை விண்ணப்பமிடும்
அவளெண்ணம்
கழுத்தில் கத்தி வைக்கும்" என
காதல் பிரிவின் கனதியை கச்சிதமாக சொல்லியிருப்பது நயப்புக்குரியதே.

'நவீனம் சிரிக்கிறது' என்ற கவிதையில்
"தொப்புளில் காதணி வளையமோ
காதின் துளையிரண்டு
"சைக்கிள் றம்மோ" - அம்மோ, ஆத்தாடி
பொம்மைக் கருத்தரிக்கும்
காவியமோ புது நவீனம்..."

என காலத்தின் வேகத்தால் நவீனம் என்ற போர்வையில் கலாசார ஆணிவேர் அரிக்கும் பண்பாட்டுச் சிதைவை பச்சையாக படம்பிடித்து காட்டியுள்ள பாங்கு மதிப்பிற்குரியது.

'மனச்சிறை' என தலைப்பிட்டு தந்துள்ள கவிதையில் ஈழத்தமிழரின் வாழ்வு தசை கிழித்து போர்நகங்கள் தந்த வலியை வார்த்தையாக்கியுள்ளார்.
"இலங்கை தாய் மடி
பிறந்தோம்
கருவைத்து எனை ஈன்ற தாயை
இழந்தோம்"
"நாம் காத்திட சோலைவன பூமி
வன்முறை கோர்ப்பில் சேலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நார்களாய் கிழிகிறது…"
உயிர் தந்த உறவின் இழப்பின்
உயர்வான உரிமை இழப்பின் - எம்
வாழ்வாதாரமாம் மண்ணின் இழப்பின் வேதனை
தரும் விசும்பல் இங்கே உணரப்படுகிறது.

'பொய்ச்சிலம்பு' எனும் சிறியதோர் கவிதையிலே
"உடற்குழாய்
கிணறுகளைத் தோண்டுகிறார்கள்
பாழ் கிணற்றுச் சமூகத்தின்
சாக்கடை குப்பைகளை
இறைக்காமல்…" என்ற சமுதாய சீர்கேடுகளை சுத்திகரிக்க அழைப்பு விடுக்கும் பொதுநலப் பார்வையை அதனூடே பதிவு செய்துள்ளார் மயூரன்.

செறிவான செழுமையான சொற்களின் அணிவகுப்பு இக்கவிதைத் தொகுப்பில் அமைந்துள்ள அதே வேளை சந்தம் நிறைந்த சாதாரண நடைமுறைச் சொற்களைக் கொண்ட கவிதைகளைக் காணாமல் இருப்பது என் பார்வையில் இங்கே சற்று உறுத்தலாக இருக்கிறது. கவிதைத் தொகுப்பை கையில் எடுப்போர் எல்லோர் மனதையும் வசிகரிக்கும் அழகு தமிழோடு, இலகு தமிழையும் இணைத்து இழைத்திருந்தால், இன்னும் வாசமிகு வண்ணப் பூக்களாயிருக்கும் இம் "மனப்பூக்கள்" என்பது எனது கருத்து.

மூன்று வருடத்துக்குள்ளாகவே மூன்று கவிதைத் தொகுப்பு நூல்களை வெளிக் கொணர்ந்துள்ள ஜே.ஆர்.மயூரனின் எழுத்திலக்கிய பயணம் எழுச்சியுடன் இன்னும் தொடர விரும்புகின்றேன், வாழ்த்துக்கள், இறையாசீர் கூறுகின்றேன்.

**அருட்பணி.ரூ.டகிளஸ் மில்ரன் லோகு,**
**இயக்குனர்,**
**அன்பிய விவிலிய ஆணைக்குழுக்கள்,**
**மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**"மனப்பூக்கள்"** எனும் இனிதான பெயருடன் வெளிவருகின்ற தம்பி ஜே.ஆர்.மயூரனின் இக்கவிதைத் தொகுப்புக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். தம்பி மயூரன் உண்மையிலேயே சமூகத்தின் மீது வெறித்தனமான அக்கறை கொண்டவர் அதை விட தமிழ் மொழியின் மீது உயிருக்கொப்பாக பற்றினைக் கொண்டவர். அவனைச் சூழவும் எப்போதும் நண்பர்கள் கூட்டம் நிறைந்திருக்கும். இதற்கு முன்னர் மயூரனின் படைப்புக்களாக வெளிவந்த **"வருடிய இளமைக்காற்று"** **"நிழலில்லா தடயங்கள்"** ஆகிய கவிதைத் தொகுதியிலிருந்து இத்தொகுதியானது மிகவும் வேறுபட்டு காணப்படுகின்றது. படிமங்கள், குறியீடுகளின் ஒட்டு மொத்தக் குவியலென்றே இந்நூலினைச் சொல்லி விட முடியும். இன்றைய இளம் கவிஞர்கள் கருத்தில் கொள்ளாத படிமங்களையும் குறியீடுகளையும் மயூரன் வேண்டியளவு பயன்படுத்தியிருக்கின்றார்.

"காற்றின் கண்களுக்குள்
தூசு விழும்
காலப் பார்வையின்
விழி உடையும்."

"இறந்த காற்றில் எனை வீசி
திறந்த வெளியில் நீ நின்று
அகோரமாய்ச் சிரிக்கின்றாய்."

"வாய்ச் சொற்களாலும்
வாள் பார்வைக் கூர் முனைகளாலும்
என் நெஞ்சின் நிலத்தைக் கீறினார்கள்."

பாலைவன மணற் குவியலுக்குள்ளே
விழிகள் வெப்பத்தில் புதைத்திட.

இவ்வாறு அவரது பல வரிகள் அவரின் கவி புனையும் திறனுக்கு சான்றுகளாய் அமைந்துள்ளன. காதல் கவிதைகளுக்குள் மட்டும் மூழ்கிக்கிடக்கும் இளம் படைப்பாளிகளிலிருந்து சமுதாயத்தின் அநீதிகள் கண்டு பொங்கும் மனநிலை அவரிடம் காணப்படுவது, இலக்கிய உலகிலேயே சிறப்பான எதிர்காலத்தினை அவர் கொண்டுள்ளார் என்பதனைப் புலப்படுத்துகின்றது. கையடக்கத் தொலைபேசியினுள்ளும், முகப்புத்தகத்திற்குள்ளும் தொலைந்து போன இன்றைய இளைஞர்கள் மத்தியில் நமது சமூகத்தின் எதிர்காலம் குறித்து கவலைகொள்கின்ற மயூரன் போன்ற இளைஞர்களும் இருக்கின்றனர் என்பது வியப்புக்குரிய விடயமே. அவரது இவ்வெளியீடானது வெற்றி பெறுவதோடு அவரிடமிருந்து இன்னும் பல காத்திரமான படைப்புக்கள் வெளிவர இறைவன் துணை செய்ய வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

**அ.நிஷாந்தன்**

**பல்துறை வித்தகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

நம்முடைய அன்பிற்குரிய மாணவனின் கவிதை நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

திகட்டாத மொழியான செம் மொழியாம் தமிழின், தமிழ் இலக்கியத்தின் தனி அழகே இலக்கியம்.

கவிதை என்பது உள்ளார்ந்த மனக்குமுறல்களை வெளிப்படுத்துகின்ற உணர்வாயுதம். இதற்கு தெளிந்த உள்ளம், சிந்தனைச் சிறகுவிரிப்பு, வளமான மொழியாற்றல், நினைப்பதைக் கலையாக கொண்டுவரும் மன மகிழ்வு என்பன காணப்படுகிறது. இரு கவிதை நூல்களால் அறிமுகமாகிய எனது கல்லூரி மாணவன் தனது அயரா உழைப்பால் மனப்பூக்கள்" எனும் கவிதை நூலினை மூன்றாவது குழந்தையாக செதுக்கியுள்ளார். இவ் அழகான நூலை கல்லூரியின் அதிபரென்ற வகையில் வாழ்த்தி நிற்கின்றேன். இவரது இதயப் படைப்பினது இலக்கியப் பாசறையின் கவியுலகு, புவியுலகை புதிது புதிதாக, அதியுயர் மானிட நேயம் காண; விதி மாற்றும் மதியுணர்வு தவழ மலர்ப் பூக்களாக உள்ள அழகை மனதின் பூக்களாக மணம் வீச விட்டுள்ளார்.

தமிழ் மீதான இலட்சிய தாகத்தையும், சமூகத்தின் எண்ணங்களையும், நிறையறிவு, நீள் நோக்கு, விரிமனது சிந்தனை விரிசலால் அலசியுள்ளார்.

மனித மணங்களில் உதித்து வரும் எண்ணச் சிறகை பொதுநோக்கு, மனிதநேயம் பேணும் வழியில் ஆற்றுப்படுத்தும் தோரணையில் எளிமை தவழும் நடையில், அணிகள் துலங்க கவியாறாக பெருகவிட்டுள்ளார்.

வடித்த இந்தக்கவிகள் செவியூறச் செய்யுமா? கவியூறும் நெஞ்சோடு களிப்போடு இனிப்போடு வாழ்த்துகின்றேன். கவியூறும் பல கவிதை காலமெலாம் படைத்திடுக.

வி. சத்தியானந்தன்,
அதிபர்,
தொழில்நுட்பக்கல்லூரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா

# பாராட்டுரை

வருடிய இளமைக்காற்றில் முதல் படியேறி மனப்பூக்களாக மூன்றாம் படியில் காலடி வைத்திருக்கும் கவிஞர் ஜே.ஆர். மயூரனின் மனப்பூக்களின் கவித்துளிகள் வெளி வருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவரது உள்ளக்கிடக்கைகளை உலகிற்கு அள்ளித்தெளித்துள்ளார். இவரது படைப்புக்கள் இன்றைய சமூகத்தின் பால் இவர் கொண்டுள்ள கரிசனையையும் அக்கறையினையையும் எடுத்தியம்புகின்றது. எமது இன்றைய சமூகத்தின் செயற்பாடுகள் சீரழிவுகள் அநீதிகள் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போன்றவற்றை தெட்டத்தெளிவாக எடுத்தியம்பியவை பாராட்டுக்குரியவையே.

இவ்வாறான இளம் கவிஞர்கள் இன்றைய காலத்தில் எமது சமூகத்தின் முத்துக்களாக ஆசான்களாக, அறிவூட்டுபவர்களாக, தெளிவூட்டுபவர்களாக உள்ளனர். இவர்களின் வெளிப்பாடுகள் நூறு பேரையில்லாவிட்டாலும் ஆறுபேரையாவது நல்வழிப்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இவ்வாறான ஒரு கவிஞன் எமது பணிமனையிலும் கடமையாற்றுவது எமக்கும் பெருமை சேர்க்கிறது. மனப்பூக்கள் மணம் வீச, மற்றவர்களை நல்மனதாக்க, தேசமெங்கும் விரிந்து இவரது படைப்புக்கள் பறந்து செல்ல தொடர்ந்து இவரது ஆக்கங்கள் எமக்கு ஊக்கமருந்தாக தெம்பூட்ட வாழ்த்துவதுடன் இவரது படைப்புக்கள் பல படிகளாக உயர்ந்து செல்ல உளமார வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன்.

X.L றெனால்ட் பிறிற்றோ
செயலாளர்,
நகரசபை,
மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஜே.ஆர் மயூரனின் மனக்காட்டுக்குள் பூத்த வெள்ளைப் பூக்களே இம்மனப்பூக்கள் "மனம்" இவர் கவிதைகளில் முக்கிய இடம் வகிக்கிறது.

"மனமெனும் வெள்ளை நோட்டில்
குத்திய கறுப்பு முட்செடிகள்"
என்ற படிமத்திலிருந்து தாவி
"மனத்தீயின் வெப்பம் கொட்டியதும்
பிணமெரியும் சுடுகாட்டுச் சாம்பலுக்குள்
எலும்புத்துண்டுகளை எண்ணுகிற காட்சி விரிகிறது.
மனக்கடலுக்குள் முத்து விதைகளைத் தேடும்
கவிஞர், தம் ஆராதனைக்குரியவனை சிறுவனமாகக் காண்கிறார்.

"நிலம் கௌவும் நிழலில்
வெப்பம் கசிந்துருகியும்
தீப்பிளம்பாய் பொரியாத
சிறுவனம். நீ!"

"100க்கு-99" என்ற கவிதை போரின் கொடுமையைப் பயங்கரமான படிமங்கள் கொண்டு சித்திரந் தீட்டும். ஒரு தட்டிலுண்ட நண்பனுயிர் களவாடிய வன்மமும், புழுப்பிடித்து நாறும் பதவிக்காடுகளும், சாக்கடை மணமும், நரகப் பந்தலுக்குள் காட்சிதரும் கள்ளிச் செடியும் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

பண்பாட்டுச் சீரழிவை நரகத்தில் தீபாவளி பட்டியலிடுகிறது.

"தொப்பூழ் கிழிக்கும் வாள் பார்வைகள்
அப்பிள் கனி விரும்பும் துறவிகள்
நிழல் விற்கும் நெருப்புக்கள்
மூளை நரம்புகள் தந்த மரண யன்னல் கம்பிகள்
இதயம் துளைக்கும் வார்த்தையாணிகள்"
என படிமங்களை அடுக்குகிறார் மயூரன். போர் விட்டுச் சென்ற வடுக்களைச் சித்தரிக்கின்றார்.

"மனச்சிறை"
"யுகங்கள் சென்றோடியும்
இன்னும் முட்கம்பி வேலியும்
முகங்காணா உறவின் ஏக்கமுமே"
எஞ்சியுள்ளன.
"நாம் காத்த சோலைவன பூமி
வன்முறைக் கோர்ப்பில்
சேலைநார்களாய்க் கிழிகிறது"
இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விதியின் கம்பத்தில்
நூலறுந்த மின்குமிழாய்
தமிழ் கழுத்தறுந்து நிற்கும்"

மனிதக் கூட்டத்தின் பால் நம் கருத்தைத் திருப்புகிறார் மயூரன்.

"சரி, போர்தந்த வலிகளை- வடுக்களை – எவ்வளவு காலந்தான் எண்ணி எண்ணி மறுக்கப்போகிறீர்கள்? மறப்போம், மன்னிப்போம்!" என்ற குரல் கேட்கிறது. அரிசியும் பணமும் தருகிறார்கள். ஆனால் என்ன பரிதாபம்! எடுத்துண்ண கையும், எண்ணிச் சொல்ல விரலும் கண்ணும் இல்லையே! என்ற வரிகள் தரும் அதிர்ச்சியினால் உறைந்து போகிறோம்.

போருக்குப் பின்னான நாடும் மக்களும் தான் மயூரனின் பாடுபொருள்கள் என்பது மேற் போந்தவற்றிலிருந்து புலனாகும். மகாகவி ரி.எஸ் எலியற்றைப் பற்றி ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுவதுண்டு. அவருடைய கவிதை நம்பிக்கை வறட்சியின் வெளிப்பாடு என. மயூரனும் அத்தகையதொரு மதிப்பீட்டுக்கு ஆளாகநேரும். ஆனால் அது அவர் குற்றமன்று அவர் வாழும் காலம் சூழல் அத்தகையது.

ஆனால் அகத்துறை சார்ந்து அவர் எழுதியுள்ள கவிதைகளே அவரைக் கவிஞனென நிலை நாட்டக்கூடியது என்று கருதுகிறேன். நாணயத்தாள் அச்சிடுவோர், பிறர் கள்ளநோட் அடிக்க முடியாத படி, தாளுக்குள்ளே, நூல் போல, ஒரு கோடு அமைத்திருப்பார்கள். காதலியின் மனதுக்குள் தான் அவ்வாறு மறைந்திருப்பதாகக் காதலன் சொல்கிறான்:-

"நாணயத்தாளில் மறைந்திடும்
நரம்பிழை நூலாய் உனக்குள்
ஒளிந்திருக்கிறேனே
எனைக் கண்டு பிடிப்பாயோ!"

அற்புதமான – தற்புதுமையான – உருவகம் இது

இவ்வளவும் சொன்ன பிறகு, ஒரு கருத்தை அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். உருவகங்களைப் பெய்து எழுதுவது புதுக்கவி வாணர்களுடைய போக்கு. அது பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் உருவகங்கள் சில ஒன்றோடொன்று மயங்கி, கவிஞன் என்ன சொல்ல வருகிறான் என வாசகன் குழம்பினால், அது அந்த கவிதையின் பலவீனம் என்றே சொல்லுவேன்.மயூரன் இது குறித்து சிறு கவனம் செலுத்த வேண்டும்.

**கவிஞர் சோ.பத்மநாதன்**
**"ஏரகம்"**
**பொற்பதி வீதி,**
**கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பூக்களின் மகரந்த சேர்க்கை

மனக்காட்டுத் தீயின் வெப்பத்தில் நின்று, அதன் நிழலோரம் ஒதுங்கிக்கொண்டு, மனவிரல் பேனாக்குருதிகள் தாங்கிய ஆயுத வார்த்தைகளை கவிதைகளாய் வெள்ளை நோட்டுகளில் தைத்துக்கொண்டு; எனக்குள் ஊறிய கவி வரிகளை சமூகக் கடலுக்குள் இறைத்துக்கொள்ள முற்படுகின்றேன்.

உரசுகின்ற மனதில் மகரந்தச் செயற்கைதனை சிவப்பு நிறத்திலே சுமக்க விட்டு சுவாசிக்கும் காற்றின் ஈரப்பதத்தினை உயிர் பெறும் வகையில் நிறைவுறாமல், உணர்வுகளை ஆடைகளாய் உடுத்திக்கொண்டு; விமர்சனக் குளத்தில் நீந்திக்கொள்ள விரைகின்றன; எனக்கேயான வரிகளும், சமூகத்துக்குரிய ஒரு பக்க கண்ணாடியின் வலிகளும், தேடல்களும்,மோதல்களும்....

சமூகத்தில் கலர் கண்ணாடிகள் உடைகின்ற தருணத்தில் தான் அதை ஒட்ட வைப்பதற்கென எழுத்துக்கள் முட்டிக் கொள்கின்றன. எனினும் அங்கேதான் எழுத்தாளனின் வலிமை நெஞ்சுக்குள் பதியம் போட விரைகின்றன.

சொற்கள் விதைக்கப்பட்ட இந்த மனப்பூக்களின் நிலத்தினில் விருட்சமாய் முளைத்து பின் மனவேர்களை உரிக்கின்ற உணர்வுகள் உங்களுக்குள்ளேயும் ஊடுருவ வேண்டுமென்பதே இப்பூக்களின் நப்பாசை.

பொது நெறி தவறுகின்ற உயிர் புள்ளியின் ஊஞ்சலில் நான் சிக்குண்டு போய் விடினும் பேனாவின் தோல்கள் சிறகுகளாய் பரிணமித்து எனையாளும்.

இதனடிப்படையில் என் மனப் பூவினை மனப்பூக்களாய் ஒன்றித்துக் கொள்ள பெறுமதியுள்ள நாலுரைகள், ஆலோசனைச் சிதறல்கள் வழங்கிய தமிழ்மொழியாளர்களுக்கு மனம் கொளுவிக் கொள்கின்ற நன்றியினைத் தெரிவிக்கின்றேன். இந் நூலினை சிறப்பாக அச்சிட்ட மன்னார் ஸ்கை நிறுவனத்தாருக்கும், கவிதையின் கருவினை சித்திரத்தில் கொட்டிய பஸ்மி பாஸில் அகமட் அவருக்கும் நன்றியை நினைந்து கொள்கின்றேன்.

இந்த மனப்பூக்களின் மொழிக்கு வேர் நிலமாய் நின்று இலக்கியத் தமிழ் வனாந்திரங்களுக்குள்ளே வெளியீட்டினை மேற்கொள்கின்ற மன்னார் தமிழ் சங்கத்திற்கும், அதன் தமிழ் மொழியறிவாளர்களுக்கும் இலக்கிய வுணர்வு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கருகொண்டவுயிர் பிள்ளைக்காய் தாயவள் மரணக்கயிற்றைத் தொடுவது போல இம்மூன்றாம் கவிற்குழந்தைக்காய் நானும் தயாராகிறேன் தாயாகிறேன்.

"நாம் கேட்பது எம்மொழியாயினும் நேசிப்பதும், நேசித்து சுவாசித்துரைப்பதும் தமிழாகட்டும்."

நன்றி

அன்புடன்..

ஜே.ஆர்.மயூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலந்தொட்டே இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. உடல் அசைவுகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டு பின் மொழியின் உதவி கொண்டு பரவலாக்கப்பட்டன. மொழிக்குரிய வரிவடிவத்தால் அவை தலைமுறை கடந்தும் கடத்தப்பட்டன. இன்றைய கணினி யுகத்தில் வெளியீட்டு வடிவங்களில் மாற்றங்கள் பலபெற்று மென்மேலும் ஏற்றங் கண்ட வண்ணம் இலக்கியங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு படைப்பாளி இருக்கின்றான். தான் காணகின்ற அனுபவிக்கின்ற, சிந்திக்கின்ற விடயங்களை செவ்வனே வெளிப்படுத்துகின்ற ஆற்றலைக் கொண்டிருக்கின்றவர், இலக்கியங்களைப் படைப்பவராகவும் ஏனையோர் ரசிகர்களாகவும் உள்ளனர். மனிதரின் பல்வகைப்பட்ட தனியாள் வேறபாடுகள் காரணமாக படைப்புக்களும் ரசிப்புக்களும் மாறுபடுகின்றன. பாராட்டுதலும், குறை காணுதலுமான விமர்சனங்கள் இதையொட்டியே எழுகின்றன. எவ்வாறாயினும் இலக்கியங்கள் எனும் வகையில் இவை எல்லாம் ஏற்புடையதே.

இலக்கிய வடிவங்கள் பலவுண்டு. நாவல், சிறுகதை, கவிதை போன்று பலவாக இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. ஆயினும் நல்லவை, கெட்டவை, உதவாதவை என இலக்கியங்களைப் பாகுபடுத்துவது அவரவர் அறிவு மற்றும் அனுபவத்தைப் பொறுத்தது. உருவாக்கப்பட்ட போது "ஒன்றுக்கும் உதவாது" என ஒதுக்கப்பட்டவை பின்னாளில் "உலகத் தரம் வாய்ந்ததாக" புகழப்பட்ட வரலாறுகள் உள்ளன. ஒருவரால் பெரிதும் விரும்பப்பட்ட ஒரு இலக்கியம் காலப் போக்கில் அவராலேயே ஒதுக்கப்படுவதும், அவ்வாறே வெறுக்கப்பட்டவை விரும்பப்படுவதும் இயல்பாக உள்ளது. ஆகவே நல்லது. கெட்டது என்பதெல்லாம் இலக்கியங்களுக்குப் பொருந்தாது. நடைமுறைச் சமூகப் பெறுமானங்களுக்கேற்ப விமர்சனங்கள் இருக்கும்.

ஒரு படைப்பாளி காலத்தின் கண்ணாடி என்றால், நல்லதை மட்டுமே காட்டவதல்ல, உள்ளதை உள்ளவாறே காட்டுவதே கண்ணாடியின் இயல்பு, இந்த வகையில் இளங் கவிஞர் ஜே.ஆர் மயூரனின் இந்த மனப்பூக்கள் கவிதைகளும் தற்போதைய நம் சமூகத்தின் சாயல்களை,. போக்குகளை வடுக்களைச் சித்தரிக்கின்றமை தெளிவாகின்றது. இருப்பினும் நட்புரிமையோடு ஒரு விடயம் ...... கவிஞரின் உள்ளத்தின் வெளிப்பாடு உயரிய வகையில் உரியவர்களுக்குச் சென்று சேர்வதற்குச் சொற்களில் எளிமையாக்கமும் கருத்துப் புலப்பாட்டில் கவனமும் தேவை. கவிஞர் மயூரன் அவர்களின் இக் கவிதைத் தொகுப்பை வெளியீடு செய்வதில் மன்னார் தமிழ்ச் சங்கம் மகிழ்வுறுகிறது. அவரது ஆக்கப் பணி மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்.

**துறையூரான் எம்.சிவானந்தன்**
**பொதுச் செயலாளர்,**
**மன்னார் தமிழ்ச்சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பூக்கள்

மனக்காட்டுக்குள்ளே
கறுப்பும் சிவப்பும் கரைத்த
நிழல் மழை பொழிய...

மனச்சாட்சிக் கம்பங்கள்
வெள்ளைப் பூவினில்
உயிர்துழாவும் கருப்பையில்
வழுக்கி விழுகின்றது..

உள்ளக் காகிதங்கள்
ஆணி வரையப்பட்ட ஓவியத்தில்
சாய்ந்து
உயிர் விடுகின்றது..

அனுபவக் கண்ணாடியின்
துண்டுகள்
ரேகைகளாய்
எலும்பினில் தசை தின்கிறது..

அறிவோடும் நரம்புச்செடியில்
பூத்த வேர்கள்
பல்லில்லாப் பாம்புகளுடன்
உடன் படிக்கை செய்கின்றது..

கொட்டும் வெப்பமனக் குளத்திலே
சொற்கற்கள் குதிக்கையில்
உடைகிறது
மனப்பூக்களின் நிலங்கள்..

மனப்பூக்கள் வாழ்வதற்காய்
மட்டுமல்ல
இறந்த பின்பும்
மனிதம் வாழ்வதற்காய்
அழுகிறது..

...





ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உடைபடும் மௌனச் சிறை

கறுப்பு நிலவுகளிரண்டு
கௌவிய துன்ப வேர்கள்
நெஞ்சுக்குழியில் முளைத்திட...

சப்பித் துப்பும் கரும்புச்சக்கையாய்
உணர்வற்றிருந்தேன்
ஒரு பொழுது..

பேனாத் தோட்டாக்கள்
எனைமெழுகிக் கொள்ள
கக்கி விடுகிறேன்
ஏதோவென் பார்வை பனிவிழ..

வெள்ளைத் தோலைக் கண்டதும்
பண்பாட்டை வெட்டித்தின்னும்
கலாசாரம்



துடுப்பென தடுத்திடத்தோள்
அடித்துப்போடும்
கட்டுமரப்பாறை..

சோம்பேறியின் வியர்வையை
சுரண்டித்தின்னும்
பச்சோந்திப் பறவைகள்..

கையேந்தும் அளவில்
கடிகாரமுட்கள் முகம் சுழித்திட
களவாடும்
காணிப் பேர்வழிகள்..

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. ஆர். மயூரன்

கண்ணெட்டும் தூரம்
பகற்கொள்ளை வியாபாரம்
கையடுக்கு மாடிகளில்
விபச்சார கோகுலம்..

கைமாற்றி நரம்புடைக்கும்
லஞ்சம்
நீதியோ! தெருமுடக்கினில்
அம்மணம்..

உயிர் பறித்தவனுக்கு
இரகசிய ஒட்சிசன்
பசி கொண்டவனுக்கு
வாள்சிறை..

பதவி வைத்து பாமரன்
வயிற்றையுதைக்கும்
அரசியல்வாதி..

கட்டை விரல் கறுத்திட்ட பின்பும்
தீர்க்கப்படாத அந்த
ஒற்றை வண்டிப்பாதையும்,
இருள் கக்கும் தெரு விளக்கும்..

மேடையும், புகழும்
பணக்காற்றாய் மோதுகையில்
மோகம் தேடும்
சாமநாய்க்கூட்டங்கள்

வான்வெள்ளி பார்த்து,
மௌன வரமாய் சாவிளைத்து
மீண்டும் முன்தோன்றும்
வேட்பாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கதி மனக்கால்கள்
துண்டிடப்படுமொரு நாள்
குப்பைகளில் வீசப்பட்டு
வேகுமிவர்களது கும்மாளம்..

சொல்லளந்து நானுரைக்க
எனையும் செல்லளந்து
கடித்துக் குரைக்க
சந்தர்ப்பம் தேடும்
சந்தர்ப்பவாதிகள்..

வறுமையின் அகராதியை
உணர்வினால் வாசிக்க
தெரிந்த நாளைவிட
வழுக்களை உரைத்திட
பொங்கி கொதித்த
நெருப்புத் துளிகள் அதிகம்..

உதட்டினில் இரும்புப் பூட்டினை
கொழுவிய வண்ணம்
கண்மருங்கினில் கோபத்தீயினை
செருகிய வண்ணம்

ஒவ்வொருணர்விலும்
கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்;
என்னைப் போல் பலர்..

...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகிதத் துளைகள்

மனமெனும் வெள்ளை நோட்டில்
குத்திய கறுப்பு முட்செடிகள்
நெருப்பினைக் கக்கி
சிவப்பு நீரோடை வேண்டுமென
தின்கிற இரக்கமில்லா அந்த
இறுதியிரவு..

வயிற்றுக் கொந்தளிப்பினிடையில்
நின்று
குட்டிக்குழந்தையொன்றழுவதைப்போல்
விரல் தட்டிவிடப்பட்ட
அந்த் மலிந்த போன
சிவப்பு நாட்கள்..

பாலைவன மணற்குவியலுக்குள்ளே
விழிகள் வெப்பத்தில் புதைந்திட
பாவம் கைகள் எங்கோ
பனிக்கட்டிகள் உடைக்கும்
மீனாய் தழும்புகள் தோய்ந்தெழ..



ஓராயிரம் சிறகினைத் தைத்தபடி
பாழ் கிணற்றுக்குள் பருவம் தேடும் குருதிகள்
இட்ம் பெயர்ந்தன;
எழுந்திருக்க முடியாமல்..

மனத்தீயின் வெப்பம் கொட்டியதும்
பிணமெரியும் சுடுகாட்டுச் சாம்பலுக்குள்
நினைவின் ஒரு பகுதி
எண்ணப்படுவதேன்
எலும்புத் துண்டுகளாக..?

...



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரின் ஊன்றுகோல்

பூமி விழுத்தும் ஓர் துளியில்
உயிர் ஊதும்
தொப்புள் கொடி..

கிள்ளைச் செடி கண்டு
உணவூட்டும் ஓர்
ஒளித்தொகுப்பின் மடி..

காலப் பந்துக்குள்
கவனச் சிந்திப்பில் நின்று
மனம் மகிழ்வாட வைக்கும்
பம்பரம்..

பிஞ்சுத் தோலில்
மெல்ல கைரசித்து - பிள்ளை
ரோஜாவைக் கொஞ்சும்
மலர்ந்த பங்கஜம்.

ஐம்புலன் தோள்மேவ
ஆயுள் வரை அன்புச் சுவரினில்
ஓவியம் தீட்டும்
அனுபவ கண்ணாடிக் கண்கள்..

உலகைத் தொடும்
பாசவலைக்காய்
மரணக்காற்றை எட்டும்
மகத்தான தியாகி..

சுயநல சொந்தச் சுவருக்குள்
வண்ண மேதும் தீட்டப்படாத
ஒற்றைத் தராசு..



ஜே. ஆர். மயூரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுப் பசி தண்டவாளக்
கம்பி துளைக்க
தன்னின்பம் மறைத்து
அடுப்பின் வெப்பம் ருசித்த
வள்ளல் கொடி..

தமிழென்னும் இன்பமுதூட்டி
தரணி கொஞ்சும் அழகிட்டு
பண்புக் கதிர்களை
வீணணற்றி பயிரிட்ட
பெண் விவசாயி...

அம்மா!
உலகவுயர் ஆசனம்
அரசாட்சிக் கொண்டாலும்,
ஊன்று கோல் என்னவோ
உன் நாமம் தான்..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வேறுபட்ட வேதம்

மனக்கடலே!
உனக்குள் வெடிக்காத
முத்து விதைகள் பல..

நீயின்னும் சூரியக் காட்டுக்குள்
பூக்காத
மெல்லிய நரம்பு வேர்..

கடலலை மணற்காற்று வீச
கண்ணுக்குளிருளாத
அதிசய விடியல் நீ..

கைவிரல் நீளமென்னும் வரை
வெண்நிறக் காற்றுக்குள்
கறுப்போவிய நிறங்கக்காத
கவியும் நீ..

நிலம் கௌவும் நிழலில்
வெப்பம் கசிந்துருகியும்
தீப்பிளம்பாய் பொரியாத
சிறுவனம் நீ..

நாக்குத் தொனியின்
இரைந்த முடிச்சுக்குள் விழாத
நேரான புள்ளியும் நீ..

கடதாசித் தாள்களின்
பூகம்பக்குவியலில் சிக்கி
ஆசை கொள்ளாத
அடங்காத் தென்றலும் நீ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பத்துக் காட்டுக் கத்தியில்
பலநூறு தலை கேட்டும்
சந்ததிப் பிணங்களில் நீந்தாத
ஒற்றை விரல் நீ..

உப்புக் கடல் விடுத்துடல்
நனையும் பாமரன் கண்ணுக்குள்
நன்னீர்க் குடமேந்தித் தெளிக்கும்
வார்த்தைகள் நீ..

கூன் நடந்தவர் கைசோர்ந்திட்டு
பொல்லெனவுனை நீயாக்கி
உதவிட்ட உயிருள்ள
கற்பாறை தேகமும் நீ..

தவழ்ந்திடும் இருகறுப்பு
நிலவுகள் கண்டு
அஹிம்சை துப்பாக்கிக் கொண்டு
தீயாய் தூசுதட்டும்
சாணக்கியனும் நீ..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய முட்செடி

காற்றின் கண்களுக்குள்
தூசு விழும்,
காலப் பார்வையின்
விழி உடையும்..

தரையுன் நிழல் சேர்க்கா
இளந்தண்ணீரும்
உன் உடல் நனையா..

கன்னி வேகத் தீயில்
கண்ணீர்த் துளியெரியும்
மனவளையம் மதுக்குடம்
கேட்கும்..

சுயநினைவிழந்து விடுவென
கவலை விண்ணப்பமிடும்
அவளெண்ணம் கழுத்தில்
கத்தி வைக்கும்..

நிழல் சுடும்
மலர் முள்ளாய் குத்தும்..

அந்தி வானழகும்,
ஆயிரம் ரோஜா மலரும்,
பொங்கி வரும் கடலலையும்
வெறுப்பேத்தும்..

உனக்கும்
தெருவோர சலூன் கடைக்கும்
ஆயிரம் ஜென்ம
பகையிருக்கும்..



ஜே. ஆர். மயூரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரையும், சேலையும்
தொட்டில் நினைவுக்கு
அர்த்தப்படும்..
உன் படுக்கையோரத் தலையணை
ஈரம் பிழியும்..

கவலை வேர்கள் உயிரில்
புகுந்து
கண்களில்
காயங்கள் காட்டும்..

காதலித்துப் பிரிந்தால்
காற்றின் கண்களுக்குள்
தூசுவிழும்..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத மனிதனே நில்!

ஆயுத மனிதனே நில்!
தசைச் சுவரால் மெழுகப்பட்ட
உன் தேகத்தில்
நான் படைக்காததை
நீயேன் உடுத்துகிறாய்..?

படைத்திட்டால் மட்டும்
போதுமா
பாவமொன்றை மட்டும்தான்
மனிதன் என்னில் வெளிச்சமிட்டாய்..

நான் போகிறேன்
தீப்பிடவும்
பிணக்கழுகாய் விழி
விரிக்கின்றேன்.



வேண்டாம் நில்!
வயிற்றை எட்டியுதைத்த
பிள்ளையாய்
தட்டிச் செல்லாதே
என் பேச்சை..

ம்..ம்...உனை வெட்டிச் செல்ல
நினைந்திருந்தும்
விட்டு வைக்கின்றேன்
தப்பிப்போ..

உலகைப் படைத்திட்டேன்
எனையுணர்வதற்காய்
உயிர் கொடுத்திட்டேன்
படைத்ததைக் காப்பதற்காய்.

நீ..
யாரோவொருவனின் கட்டளைக்கு
பாதை திறந்து விடுகிறாய்
உயிரைச் சுடுகிறாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. ஆர். மயூரன்

நீ இரத்தம் உறிஞ்சிடப் போவது
என் அணுவில் இருந்துதான்.
வெல்ல எண்ணுவதும்
எனைத்தான்.

கடவுளே.. கடவுளே
சுட்டுவிடுவேன்
உன் உடல் நரம்பினை
உருவுவேன்:

அடித்துப் போடுவேன்
நிறுத்து! உன் பேச்சை.

மனிதன்:
நீயென்னைப் படைத்தாயோ?
உன் இரத்தம் குடித்து
அதில் மிதந்து போர்க்களம்
செல்வேன்
தப்பிப்பாயோ..

மனிதா.. நீயுனக்குள்
பொத்திய என் காற்றுக் குமிழியைக்
காவலிடுகிறாய்
அதன் வழியே எனக்கு
மரணவோலை தீட்ட முனைகிறாய்.

பட.. பட... டா்டர்
டும்..டும்...டும்..டும்டும்டும்
ஓய்ந்த கணத்தில்
மார்பு தட்டினான் மனிதன்.

வானம் வழுக்கியவொளிக்கும்
"மனிதன் மனிதனாய்
இல்லையென"
முழக்கமிட்டதுவோர்
கூக்குரல்..


...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினிக் கடவுளே..

பல்லவி



பட்டினிக் கடவுளே,
பட்டினிக் கடவுளே - இங்கே
தொட்டில் குழந்தை அழுகிறதே
பாலூறும் தாய்மார்பிலும் விலைவாசி
நரம்புகள் உருள்கிறதே

அனுபல்லவி
கறுப்பு கொடிகாட்டும் இந்த
விலைவாசி கயிறென்ன
ஏழை நமக்கு கொலைக்களமா..

(பட்டினிக் கடவுளே)

சரணம் 1
கைகாய்ந்து மண் சிந்தும் வியர்வை மழையில்
காசு மரங்கள் முளைத்ததில்லை
கல் நெஞ்சக்காரன் வீட்டின் காதுகளுக்கு பட்டினியின் கூக்குரல்
கேட்கவில்லை
அந்திவான சூரியன் சிவக்கிறதே
இன்னும் அடுப்படிப் பூனைகள் நகரவில்லை

(பட்டினிக் கடவுளே)

சரணம் 2
அலைமோதும் உயிர் காற்றின் பயணங்களிலே
கொட்டிக் கிடக்கும் விலை மண்டலம் உடையாதோ
தொட்டில் கருவின் வயிற்றுப் பசிக்கு ஒரு துளிப்பாலும் உப்புமின்றி
கிடைக்காதோ
மரணமின்றி மனித எலும்புகள் தெரிகிறது
விலைவாசித் தோல்கள் மூடவில்லையே

(பட்டினிக் கடவுளே..)

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறமிழக்கா ஞாபகம்

இரு படகுச் சுவருடைய
வெள்ளையும்,
நீலமுமாகச் சொருகி
மரணச் சிலுவைப் பொதிகள்
தூக்கி பாய்ந்தோம்
எவரெஸ்ட் காற்றுக்குள்..

வெண்சுவரொட்டும்
கறுப்புச் சுவரில்
அடங்கிடுவான் வெள்ளையன்;
முன்றே விரலில்..

மூங்கில் தடியும் இசைபடிக்க
மேளமாகிக் கொள்ளும்
முதுகும்..

இவை எழுதப்படாத
விதியானதொரு காலம்..

ஒரேயொரு குடும்பக்கருவுக்குள்ளே
தலைகளும், கால்களும்,
வம்புகளும், வாய் கைகலப்பும்..

சூரிய கற்களின் சங்கமத்தில்
வெளிசொட்டும் விழுதுகளாய்
நாம் எதிரே..

கணிதப் பாம்பு கக்கியவுணர்வுகளில்
தழும்புகள் பாயும்,
ஆங்கில முதலை தின்கிற பசியாய்,
தூக்கம் கண் சொருகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வரவு இல்லாவிடில்
குற்றாலருவிகளாய்
நனைந்திருப்போம் - இசை பாய்ந்திட்டு
மகிழ்ந்திருப்போம்.

முப்பத்திரெண்டுச் சொந்தமும்
சிவப்புத் தசைப்புரள்விற்காய்
ஏப்பம் கொள்ளும்
எந்நேரமும் வாயசையும்..

பாடப்போட்டிக்குள்
வெற்றி என்பதோ
எங்கேயோ அழுதிருக்கும்
ஆனால்!
கதிரைக் கம்பிகள்,
மேல் கண்ணாடித் கதவினில்
கைப்பக்குவம் ஒட்டியிருக்கும்.

வாய் பிளந்த
தோல்பைகளுக்குள்
உற்பத்தியாக்கப்படும்
உணவு..

இயற்கை மரத்தடி நிழல்
ஆசானுக்கு போதிமரமென்றாகும்
வியர்வைக் குழந்தைகளை
தாய்காற்று மெதுவாய்
தடவிப் போகும்..

புத்தகப் பொந்திற்குள்
எழுத்துப் பறவைகள் அங்குமிங்குமாய்
சிறகடிக்கும்..
சில நேரம் சிவப்புக் குருவிகள்
எச்சமிடும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அந்தி வானம் சிந்தும் பொழுதாய்
முந்தி விழுந்தன
பள்ளிக் காலங்கள்.

சொர்க்கப் பெயர்
வெட்கம்
விட்டுச் சொல்வதென்றால்!

பொழுதும் இரவுக் கறையும்
மீண்டும் மீசைத்தடம்
துரத்துமென்றால்!

என் உயிர் மூச்சை
விரும்பிப் புதைப்பேன்
பள்ளிக் காற்றுக்குள் நான்..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமில்லாத வொன்றுக்காய்

நெருஞ்சி முட் தலைவன்
குத்துகிறான்
பாமரன் வியர்வைத் துளையில்..

தன் நடப்புக்கு நட நீ யென
கத்திமுனைச் சொற்கொண்டு
யுத்தம் ஏவுகிறான்.

முட்கள் குதிரையின்
கொம்பறியவில்லை
கவரி மான்கள் கப்பம்
கேட்பதில்லை.



இரண்டடுக்கு வரும் கவியும்
ஆயிரம் பூமேடைப் புழுகும், புகழும்
உரியவர்க்கு வழங்கப்படாததால்
கற்பாறைகளில் வலிமை
மண் வீடாய்..

மேற்கே சிவப்பவனும்,
மேலே இருப்பவனும்
நீதி மழை பொழிகையில் தான்
நனைவது யாரெனத் தெரியும்..

அங்கே நியாயத்தையுரைப்பார்,
படி இறங்கியதும்
அதற்கெதிராய்
ஆள்! வைத்துக் குரைப்பார்.

மக்கள் பார்வையில் பேரெடுக்க
கர்ச்சிக்கும் சிங்கமாய்
ஓநாய்களை விரட்டுவார்:
அடுத்த தெருவில்
வந்து சேரும் ஓநாய்கள்
இவர் வீசும் இறைச்சிக்காய்.

...



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் அழுகிறார்

நிலவொளி தெறிக்கும்
சாம்ராச்சிய காட்டுக்குள்
தீப்பந்த கும்பல்களின் வேண்டுதல்..

மனித பலி கடவுளுக்காக,
இனபலி சுரண்டலுக்காக..

பலியும், வலியும்
ஆயுத விலை போகிறது:
கடவுள் சந்தையில்..

துப்பாக்கிக் கோதும்,
குருதி கசியும் சதையும்
எரிந்த உடலும்,
இன்னும் எத்தனை காலம்
தூக்குச் சிறைக்குள் இல்லாமல்..

படைத்ததை ஆழ்கவென
வழங்க,
மனிதனோ ஆழ்கிறான்:
கடவுளையும் சேர்த்து..

அறிவு தின்கிற இனத் துவேசத்தினால்,
ஆட்சிக் கோலினால்,
தினசரி செய்திகள்
அயல் நாட்டில் தலைப்புச் செய்தியாக

இனப் பலி இனத்துக்காகவா..?
இல்லை, இதுவுன்
சுயத்துக்காக..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டான காற்றுக்கள்
வசித்திடும் உனக்கேது
அஹிம்சையின் அடிவேர்.?

வெட்டவெளி வானம் தொட்டு
உயிர்காற்றை உரசிப்பார்
தெரியும்,
பூமியின் அழுகையும்,
எம் வர்க்கத்தின் பிழைப்பும்..

கடவுளின் கையில்
ஆயுதம் கொடுக்கும் ரேகைகள்
வளர்கின்றன
காட்டுச் செடி மரங்களாய்
அதுவும்..
இனத்தை ஒட்டி.

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிந்த சேறு

குருதி மேவும் தேகத்தினில்
செத்துப் பிழைக்க வைக்கிறது!
சொத்துப் பாசம்..

என்றிறப்பாரென ஏங்கித் தவித்து
பங்கு கேட்கத் துடிக்கும்
பிணக்காட்டு பண ஞானம்


கடலுக்குள்
கண்ணீர்க்குளம் கட்டிவைத்து
முற்கூட்டியே முனகலிடும்
நடிப்பு ஏராளம்..

குண்டூசியைக் கூட
சொந்தம் கொண்டாட
சந்தர்ப்பம் கிடையாது.

கண்ணாடி சிதறும்
உடலழுகும்
சொந்தமில்லை உனக்கு..

தெளிந்த சேற்றுக்குள்
உன்னை தூக்கி நீயே எறி
அங்கே!
காலத்தை நீ மனவிரலால்
உழுவதை உணர்வாய்...

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயம் கொழுவாத சட்டம்

சட்டம் தைத்த போர்வையில்
மாட்டிக் கொள்கின்றன
மெல்லிய மனக் குண்டுசிகள்..

செங்கல் பிரித்த சுவராய்
அவற்றுக்குண்டு
பாரியத் துளைகள்..

அபிநயம் காட்டும்
வண்ண வேலிகளே
இதற்கு முதல் மூலதனம்..

கறுப்பு மூச்சினை விழுங்கும்
நாக்கினில்
கொட்டப்பட்ட ரேகையின்
பிரதிகள்..

உயிர்ப்பில்லா சட்டங்கள்
பாம்பின் சட்டைகளாய்
கழற்றபட்டிருக்கும்
எங்கோ..



மீண்டும்
புதுச்சட்டையணியும் சட்டம்..

தாய் நீதியான தராசிற்கும்
இரு விழி மறைத்த துணிக்கும்
வணங்கும் என் பேனா.

இயந்திர மனதெழுதும்
கடிதக் குறிப்பேட்டில்
காக்கை பிடிக்கும் சேவல்
கழுகுக்கும்.

சிவப்புச் சட்ட நரிகளுக்கும்
என் உணர்வின்
மை கூட விதிவிலக்கு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. ஆர். மயூரன்

நீதி விழியும், போதி மரமும்
யாவரும் கற்றதாய்
புகுகிறார்கள் - இங்கே

அடைக்கப்படுகிறது;
என் பேனாவின் செவிகள்
வாய்மட்டும் பேசுகிறது.

பணப்பசை தேகமொட்டியிருந்தால்
சட்டத்தின் விரலும்
தொடுவதற்குப் பயப்படுகிறது;
எம் சமூகத்தில்

வரிகள் வலிகளை
விழுத்தாவிடினும்
இதில் புரண்டு சாம்பலாய்
அழாதவர்கள் எவருண்டு.?

சட்டத்தின் நாக்கு
சுடல் வேண்டும்
சூரியனாய்..

சட்டத்தின் சட்டை
காக்க வேண்டும்
உயிர் மோதும் காற்றாய்.

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முட்கம்பி

*

சமாதானக் காற்றையும்,

சுதந்திரப் பறவைகளையும்,
உயிர்ப்போடு விடுகின்றார்கள்
பத்திரிகைகளில் மட்டும்..
இன்னும்
மூடப்படுகின்றன:
தேடப்படுகின்றன:
வீட்டு வாசல் கதவும்,
பெண்களின் கற்பும்.


...



*

யுத்தத்தின் உடல் சட்டமும்,
உயிர்பலி எண்ணிக்கையின்
வாயடைப்பும்,
சுதந்திரத்திற்கான
தடைச்சட்டமா...?

...



*

சூரிய விழிக்குள்
முள்ளென குத்துகின்ற
பச்சைக் குதிரைகள்
நொண்டி ஊனங்களாய்
நிறம் சேர்ப்பது எதற்காக.?



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலப்பசிப் பச்சை

மஞ்சள் நிறக் காகிதங்கள்
பச்சை நிற நீள் பரப்பில்
தழுவுகிற
பயங்கரக் கனப் பொழுதில்..



பேருந்துக்குள் மௌனித்த
வடுக்கள்
பார்வைகள் கண்டெடுழ..

பச்சை நிழல் மரம் வந்து
கக்கிப் போன சிவப்புத் தந்தங்கள்
காலப்பதிவை அலங்கரிக்கின்றன;
அண்டை நிலமாய்..

உடையும் இருளெடுத்து
காவலிடுகின்றன
ஆயுதத் தொண்டைத் தொனிகள்.

பிசுபிசுக்கு நிலங்கள்
உறிஞ்சுகின்றன;
வேட்கைகளின் பிரதி பலிப்பை.

வெற்றிடச் சந்தைக்குள்
வியாபாரச் சில்லறை சலசலப்பில்
ஏப்பமிடுகிறது
எரித்தும் மண் புழு தீண்டாத
ஆத்மம்..

...



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிவு

கண்ணாடிக் குமிழ்களாயுடைகின்றன:

இரு கறுப்பு நிலவுகள்.
ஒடிந்த துண்டின் வழுவழுப்பில்
ததும்புகின்றது.
உப்பு நீர் சுரங்கங்கள்.

கறுப்பு நிலவினொரு கீழ்ப்படகினில்
கடல் தாண்டியோடும் மீன்குஞ்சுகள்
தற்கொலை செய்கின்றதும்
ஏனோ தரைதனில்..


கறுப்பும், வெள்ளையுமாய்
படகுள் காயங்கள்
மெழுகப்பட்டிருந்தும்
வெள்ளையாகின்றது கசியும் கடல்.

நீல முரசும் வட்டப் பெண்ணுக்கு
திரையிடும் பஞ்சுக் கொத்துக்கள்
பகலாகின்றது.

இரு கறுப்பு நிலவிற்கு உறையிடும்
நான்கு மடல் படகுகள்
நள்ளிரவினிலும் பிரயாணம்
செய்கின்றது.

கசியும் ஓர் நொடி
தவழும் இரு நிலவுகள்.

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதி

சிவப்பு யுத்த விலையின் ஈரம்
வெறும் அரிசி பருப்பால்
காய்ந்து விடுமா? சொல்.


நிலமொட்டிய கால் ரேகைகள்
மீண்டும் எழுந்து நடக்கையில்
எமைக் கடக்குமா?. சந்தோசரெயின்..

முண்டப் பனையும்,
மூக்கில்லா வீட்டு மதிற் சுவரும்
மீண்டும் உருவகித்தால்!

கைவிரல் குத்திக் கொழுவி,
நொங்குக் குழியை
தோண்டாமலா விடப் போறார்கள்:

நாட்காட்டி எலும்பும்
தினச்சதையும்
காற்று வெளியில் சுதந்திரமாய்
பறந்திட
பாதிக்களம் நிறமிழந்து
பாதை தராதோ.?

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிச்சுக்கு முன்னே

சாவின் கயிறென்

உயிர்தொடுமுன்
திறமை முடிச்சு நீந்தும்:
வரலாற்றுக் கோப்பைக்குள்.


காய் பறிக்கும் கனவுலக தேசத்தில்
கறுப்பு மை தூவப்படாமல்
வண்ணம் சேர்க்கும்
என் வலிமைகள்..

மேடைவன ஈரந்தங்களிலே
நகர்ந்திடும் நரிகள்
தன் தலைப்பாகை தூக்கிற்கு
நூல் தைக்கும்.

மனப்பூக்கள் சொட்டும்
சாலையோரங்களில் - என்
இசைவனாந்திரம் வெள்ளை
நிறமுடுத்தும்

இனி வறுமையும்,
கருமையும் உச்சரிக்க
நாக்கிற்கு
எலும்பு முளைக்கட்டும்.

...





ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைரேகை

கொதித்திருக்கும் வாய்பிளந்த தீயில்
எறிந்தார்கள் எனை
இரக்கமின்றி..

ஆழ்பாவக்கிடங்கில்
விழுத்தினார்கள் - என்
நுனிச்சதை தெரிந்திடாமல்

எண்ணிக்கையில்லா முட்புதருக்குள்
என் விழியை விரித்துக்
குத்தினார்கள்.

வாய்ச் சொற்களாலும்
வாள் பார்வைக் கூர் முனைகளாலும்
என் நெஞ்சின் நிலத்தைக் கீறினார்கள்.

இளமை கொழுவிய நாளில்
இயந்திரமாய்
சுழற்றினார்கள்..

தோல்பையும், பேனா முனையும்
கொண்டு சென்ற வேளையில்
ஆயுதங்களைப் பரிசளித்தார்கள்.

மாலைகள் என் கழுத்தில்
விழுந்த கனத்தில்
கல்லெறிந்து பூவை
இரும்புவிரலால் கசக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் தேடி உலவுகையில்
பிசாசுகளின் நடுவே
எனை ஆணி அடித்துக்
கொழுவினார்கள்.

ரோஜா மலரைப் பற்றி
பேசுகையில்
கள்ளிப் பாலைத்
தொண்டைக்குள்
அழுத்தி ஊற்றினார்கள்.

அஹிம்சை போராட்ட வழியில்
நின்றிருக்கையில்
எதிரே கலவரத்திற்கு
காசை
எண்ணிக் கொண்டிருந்தார்கள்..

வேலைக்கான நேர்முகத் தேர்விற்கு
அழைப்பு விடுகையில்
அரசியல் பிரதிநிதித்துவம் முளைக்க
வேலையை மாற்றினார்கள்;
இன்னொருவருக்கு..

வீட்டுக் குடிசையில் மழைக்குமிழுடன்
விளையாடுகையில்
இயந்திரப் பறவையால்
குண்டு வீசினார்கள்

மரத்தடி நிழலில் ஓய்வுச் சிறகை
விரித்திருக்கையில்
முழுப் பலத்தையும் கொண்டு
வேரைக் கிளறினார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படியாய் இறந்து கொண்டு
வாழ்ந்திருக்கையில்
ஓர் நாள் இறந்திருந்தேன்.."


வந்திருந்தார்கள்:
எவற்றிற்கும் சம்பந்தமில்லா
முயல் குட்டிகளாய்.

"நெருப்பிற்கும், தேன் குடத்திற்கும்
குறுக்கே உள்ள படலையில்"

யாரோ ஒருவர் வந்தார்:
வாழ்ந்ததை
திரையிட்டுச் சென்றார்.

கொதித்த நெருப்புக் குழிகள்
இழுத்தன:
அவர்களை..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுத் துகள்கள்

நாடுவிட்டு நாடு கடந்தால் தானே
அகதி ?
ஏன் சொந்த நாட்டுக்குள்
நாங்கள் அகதியெனும்
முத்திரைகளோடு.?

பேரினம் விதிக்கும் சட்டங்களில்
சிதறி நாம் சாகிறோம்
நீதி வளத் தீர்ப்பிட எவர் தயார்.?

கண்கண்டுரைத்தவர் - உரிமைச்
சொல்கொண்டுரைத்தவர்
இன்னும் கண்கள் காணவில்லையே
ஏன்.?

துப்பாக்கி வளைவினில் சேலை
பாம்புகளாய் வளைகின்றதே
ஏன் துடித்து வெடித்தோடும்
நரம்புகளில் வீரம் குறைகிறதோ.?

சுதந்திரக் காட்டுக்குள்
இலவசமாய் புகுந்திடினும் - அங்கே
விஷப் பாம்பும்,
பூச்சியும் இல்லாமலா
இருக்கிறது.?

ஒலி பெருக்கியில் வீர வசனம்
பேசுகின்றார் வீட்டு உணவில்
உப்பில்லை என்றுதானோ.?



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கடந்தவைகளை மறந்திடச் சொல்லி
அரிசியும் பணமும்
கொடுக்கின்றார்கள்

யாருக்குத் தெரியும்;
எடுத்துண்ண கையும்
எண்ணிச் சொல்ல விரலும்
கண்ணும் இல்லையென்று..

விதியின் கம்பத்தில்
நூலறுந்த மின்குமிழாய் – தமிழ்
கழுத்தறுத்து நிற்பதேன் கூறு?

இதைக் கண்டும் விழிமாற்றி
மொழி பேசுபவன்
சாகாவரம் பெற்றவனோ.?

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சிறை

இறந்த காற்றின் தழுவல்
கருவாகும் நேரம்.

சொந்தத்தின்
அன்புச் சிறைக்குள்
விரும்பியே
தானாய் சிக்குண்டு வாழ்ந்திருந்தோம்.

சுதந்திரம் துப்பிய
கறுப்பு நிலமாய்
பட்டென்று சுற்றிக் கொண்டன;
கொன்றன
போர்கால மேகங்கள்.

அதுதான். அவ்விடந்தான்
எண்ணற்ற பிரேதங்கள்
இன பேதங்களாக..

கண்கள் எதை மறந்தது.?
உள்ளம் எதை மறந்திடாமல்
இருந்தது.?
என்றொரு கேள்வி..

இலங்கைத் தாய்மடி பிறந்தோம்
கரு வைத்து உயிர்
சுமந்த தாயினை
யுத்தத்தால் இழந்தோம்..

யுகங்கள் சென்றோடினும்
இன்னும் முட்கம்பி நிழலும்,
முகங்காணா உறவும்,
உரிகிறது உண்கிற கோப்பையிலும்..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காத்திட்ட
சோலைவன பூமி
வன்முறை கோர்ப்பில்
சேலை நார்களாய் கிழிகிறது..

யுத்தம்
கொப்பளித்த வடுக்கள்
விலைவாசியின் குழந்தையாய்
இன்னும் தொடர்கிறது:
எங்கள் அகதிப் பயணங்களிலே..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லறை விரல் விழிகள்

வறுமைக் கோப்பை வெளுக்கும்
போராட்டம்;
காசுள்ளவன் நடத்தும்
சொகுசாட்டம்.

கண்டேன், எழுதினேன்
உயிரினாழம் தோண்டப்பட்டேன்.

இங்கே எனக்குள் ஏற்றப்படுகின்றன;
தீச் சுவாலை கவிழ்க்கும்
பனித்துளிச் சவால்கள்..

புத்தகப்பை கொண்டலைந்து
கல்வித் தாகம் தேடும்
கைகளில் பிச்சைத் தட்டு..



எங்கோ அதுவும்
குப்பைத் தொட்டிக்குள் தான்
வயிற்றை கழுவியிருக்கும்..

பசியின் கோடுகள்
பற்களுக்குள்ளே சிக்கிக்கொள்ள
அம்மா.. அண்ணா..
ஐயாவென
பஸ்வண்டிக்குள் நெரித்த
குரலில் உறவுப் பாலம்..

சில்லறையின் சிரிப்பிற்காய்
அழுகிறாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று மழை மின்னல்
வெட்டிய பொழுதில் தானவள்
தன் முகம் பார்த்திருக்க கூடும்..

வரிகளும், வலிகளும் - அவள்
விழி எனக்குணர்த்திய படி..

தீச் சுவாலைகள் நிறமிழந்தன
மனச் சுவருக்குள்.
உடைந்தன;
கண்ணாடி இரவுகள்.

அவள் இடுப்பின் மூலையில்
பிஞ்சித் தோல் கொழுவியிருக்க,
ஏனோ தாயெனும் அடைமொழியும்
இவளுக்கு..

விதிவேக வைத்திட்ட
பனிக்காட்டு சிவப்பு ரோஜா
சனக்கூட்ட நெரிப்பிலும்
தட்டு என்று நிறைத்திடும்
என்ற எதிர்பார்ப்பினை மட்டும்
தொடரவிட்டிருந்தாள்..

நாட்காட்டிக் கடிதங்கள்
நாணமிட்ட அவள் விழிகளை
வறுமைக் கடலில்
தள்ளிவிட்டதும் ஏனோ.?

இரண்டு வாயசைய
பிச்சைக்காய் அவளசைய
தலைமேல் இறங்குகிறது;
நடுவானம்..

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பனி


உயிர்துளையின் வலியடைக்க
தேடினேன் மருத்துவம்..

மனக் கால்களோடும்,
இதயப் பற்களோடும்,
செல்வந்த நீரோடையில்
தாண்டு நனைந்தேன்.

காலபற் சுழல
உயிர்த்துளையின் அகலங்காண
என் ஆசையினைக் கொத்தி
அடைகாத்து நின்றன
மாமிசக் கழுகுகள்.

மூன்று முதலை மனிதனிடம்
ஆறு பாம்புகள் விற்க
முட்டைக்குள் வைத்து விட்டார்கள்;
சில்லறைகள்..

கடிகாரச் சுழல் கம்பியில்
முகம் புதைத்தும்
விளக்குக் குப்பிக்குள்
வியர்வை மண்ணெய்யிட்டும்
வரம் பெறவில்லையென்
மருத்துவம்.



பாறை பிரட்டும் எறும்பாய்,
வானமுடைக்கும் முகிலாய்,
காடெரிக்கும் மழையாய்
தவழுகிறேன்; வேகக் கனவில்..

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100ற்கு 99

தினசரி நாட்காட்டி விரல்
பறந்தோடும்
முகக் கண்ணாடியுடையும்.

வாடையும் தென்றலும்
சினச் சூரியனில்
கோபக் கதிர் கொட்டும்.

சொந்தம் வைத்திட்ட பெயர்
சந்தியிலும், கடைத்தெருவிலும்
சிவரோரங்களில் சாணி தின்னும்.

ஒரு தட்டில் உண்ட நண்பனுயிர்
காவு கொள்ள
முகச்சாயம் நிறம் மாறும்.

எட்டுச் சில்லும், பத்துப் படியும்
காற்றலைபேசியில் கற்பழிக்கப்படும்.

நீ சுவாசித்திட்ட காற்று
உனக்குள் புதைந்து
பாடை கட்ட விழி சிவக்கும்.

நெத்தி நடுவில்
கண்கள் வாள் வைத்திருக்கும்
கைரேகையில் பாவ நரம்புகள்
பிண்ணிப்புடைத்திருக்கும்.



பண முதலையின் நாக்காய்
நீ பெற்றவோட்டுக்கும்
பேசும் பேச்சிற்கும்
சம்பந்தமின்றியே போகும்.



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் போக
சாக்கடை மணமும்,
குப்பைக் குணமும் உன்னை
பலரில் அடையாளப்படுத்தும்.

ஆசைப்பூமி விழுந்து
கழுத்து முட்டும்.
பதவிக் காடுகள் ஏழைக்கண்ணீர்
கொண்டு
புழுப்பிடித்து நாறும்.

எனினும்! நெஞ்சு நடுவில்
மனச்சாட்சி மூன்றுமுறை
மணியடிக்கும்..

நீயிடும் கையெழுத்தில்
இரத்தப் பழிகளோடு
பிசாசின்
குரலொலி நாணேற்றும்.

மனுக்கடிதம் மறுமுறை
கட்டைவிரலில் தோல்வியுற்றால்
தேர்தல் விஷப் பாம்புகள்
கொத்த காத்திருக்கும்:
உன்னை..

...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகத்தில் தீபாவளி

வேரைத் தின்னும் இலைகள்
உணர்வையுடுத்தும் நரம்புகள்
பூஞ்சணக் கோப்பை விழும் பாவம்
நம்பிருசிக்கும் உதடுகள் - இதில்
இரவை வெருட்டும் கறுப்புக்கள்

மண் தின்னும் ஆள் விரல் கம்புகள்
பொய்பிரட்டும் வெள்ளையர்கள்
கண் கரைத்திடும் இமைகள்
என் கவியுறுத்தும் சொற்கள் - இவை
காலம் கக்கிய வறுமை வயிறுகள்.



தொப்பூழ் கிழிக்கும் வாள் பார்வைகள்
அப்பிள் கனி விரும்பும் துறவிகள்
நிழல் விற்கும் நெருப்புக்கள்
தீயனவுடுத்தும் மூலை மடிப்புக்கள் - தந்த
மரண ஜன்னல் கம்பிகள்.

தோள் வெட்டும் பணக் கடல்கள்
கொப்பளிக்கும் மன நார்கள்
மறைவில் உயிர் உறிஞ்சும் ஒட்சிசன்
வறுமை குழி தோண்டும் விலை மட்டம் - இவை
நரகங்களின் அந்நிய தேசம்.

மோகங்கொள்ளும் முரட்டுப் பறவைகள்
இதயம் துளைத்திடும் வார்த்தை ஆணிகள்
பிச்சை கேட்கும் லஞ்சப் பொய்கள்
பொருள் களவுடைத்துப்
பொறுக்கிய நாவல்கள் - இதில்
கதிரைக் குதிக்குள் முளைத்த
நாணயம்.

...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையின் இன்பம்.

இதயக் கருவறைக்குள்
புது அர்த்தம் சொல்லி
நுழைந்தவளே - என் உயிரை
நூலாய் திரித்தவளே..

உன் விழிப்பார்வை
என் மீது விழாவிடில்
இரவின் கனவுகள் பசியற்று
இறந்திருக்கும்..

உன் கருங்கூந்தல் படகு
நடுக்கடல் இடைதொடாவிடில்
பூவனச்சோலை தரைதொட்டே
அழுதிருக்கும்.

உன் மெல்லிய பனிப்பூ கைவிரல்
நான் தீண்டாவிடில்
வெண்மேக நீர்த்துளி
தீயில் தாகம் தேடியிருக்கும்.

உன் செவ்வாயிதழ்
உயிர் பெறாவிடில் - என்
கவிதையுடல் மௌனக்
கல்லறையில் இறந்திருக்கும்..

உன் கன்னம் வெட்கம்
மறந்து சிவக்காவிடில்
என்றோ செவ்வானமென்ற
பெயர் இல்லாதிருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உலவிய கால்தடம் - என்
மனஅலைகள் கொஞ்சாவிடில்
மோக முட்கள் என் இளமையை
வெறுத்திருக்கும்.

சுகம் கொல்லாமல்
வரங்கள் இல்லாமல்
நாம் இருவரும்
தொட்டிருந்தால்
நாம்.. நாம் என்பதற்கேனும்
அர்த்தமின்றிப் போயிருக்கும்..

இறுதியாய்
கல்லறைக் கடிதங்கள
எனையுனக்குள் எழுத
மொழி தேடிக் கொண்டிருக்கும்..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனம் சிரிக்கிறது.

புதியன இச்சும் மனிதச் சமூகமிது
பழையனப் பண்பினைப் பகுத்தறிவாரோ!
எவையென உதட்டுச் சொல்லில்
குதிப்பவரோ
முதியோராயுதைபடுகையில்
புதியன கொள்வாரோ?

அரைப் பாதியுடல் தெரியும்
மங்கை:
விழியசைத்து வீதி நடக்க
நாணமதுவுண்டோ?
மது மங்கையுடலின்பம் விலையில்
கண்டு பருகிக் கொள்கின்றனரோ
புதிய நவீனமென்று.?

தொப்பூழில் காதணி வளையமோ!
காதுத்துளையிலிரண்டு
சைக்கிள் "றம்மோ".?
அம்மோ, ஆத்தாடி
பொம்மைக் கருத்தருக்கும்
காவியமோ புது நவீனம்.?

கிளையில் தாவிடும்
குரங்கின் கையில்
பண்பாட்டு பூமாலைகளோ.
நம் நாட்டு பெண்களின்
இடைச் சொருகில்
நடிகன் வரைபடமோ.?

அடுப்படிச் சூட்டில் குளிர்காய்ந்திடும்
பூனையாய்
தெருப்படி நடக்க விரைந்திடும்
மோகமாம்;
இந்த புதிய நவீனமாம்.





ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தமிடா உள்ளத்துப்பாக்கி

மானமுள்ள சிட்டுக் குருவியொன்று
பசித் தீயின் உந்துதலால்
காற்றைக் கிழித்துக் கொண்டு
பனங்காய் தொப்பியின்
எதிர் நின்றது..


நல்ல வேட்டையென்றபடி
வாய்க்குமிழால்
எளியவனாயுரைத்திட்டு
சிட்டுக் குருவியின் பிஞ்சத் தேகம்
புசித்திட வூர்ந்தது:
நாகம்.

ஓரேயொரு இசைத்தேடலுக்காய்
அலைந்த சிட்டுக்குருவிக்கு
பயவேர்வைக் குழம்புகள் கசிய
நாகம்
காம நரியாய் உரு கொண்டது.

பனங்காய்த் தொப்பி கழன்றபடி
வெளியே தலைநீட்டிக்
கொண்டன;
நாணய தலையின் தாள்கள்.

நாகமோ!
தேகசுகம் கேட்டலையவே
சிறுதீயின் கொப்பளிப்புடன்
தன் பசியடக்கி
உயிர் கிழித்தது சிட்டுக்குருவி..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் கற்கள்

உனைச்சேர ஆசையலைகள்

உள்ளக் கதவிலடித்தாலும்
வெள்ளை இதயம் வெய்யிலில்
வேகிறதே...

சொற்கோளாமல் நீ சிவந்த வேளை
என் மனச் சோலைக்குள்
மரணித்த வண்டுகள்
உயிர் பெற்று அழுகின்றதே..

இலையுதிர் காலத்தில்
பூத்திட்ட என் காதல் பூக்கள்
முன்பனித் தேதியிலும்
வன்முறைக் கவிதை எழுகிறதே..

இதைவிட்டு விரைகிறேன்:
நெடுந்தூரம் பயணித்தேன்
ஆயுள் முழுவதும் விற்று
உனக்களிக்கின்றேன்
என் வாழ்வை பயணச்சீட்டாய்..

...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குழந்தைகள்

வினாவும், விடையும்
எதிரும் புதிருமாய்
மோதிக் கொள்ள - இறுதியில்
அடைபட்ட கோழியாய்
போலி மேன் மக்களாய்:
கருவில்லா முட்டையிடும்
வரண்ட மௌனம்
எங்களுக்கு.. எங்களால்.

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்திடம் ஒரு நாஸ்திகன்

கறுத்த நிலவு
வெள்ளிவிழி
சிவந்த காற்று..


பச்சை வானம்
பரிதி மின்னல்
இச்சையிடும் உயிர்..

நிறமற்ற முள்
சுழல் நிலம்
மௌனப் பற்கள்..

நித்திரைக் கால்கள்
முத்திரைக் கோள்கள்
முரண்டு பிடிக்கும் தேகம்..

சத்தமிட்ட காகிதம்
முத்தமிடும் கல்லறைப் பூ
நீலநிறம் காவும் இதயம்..

மரணித்துலாவும் சுவாசம்
வென்றுயிர்த்த மனிதம்
வானேறும் இரத்தகுமிழ்..



இவையெலாம்
விஞ்ஞான புத்திக்குள்
குதித்திடலாம், வெளியே
கும்மாளமிட்டு பொரியலாம்.

வீண் கதையெதற்கு.?
கடவுள் என்ற ஒருத்தன்
இல்லாவிடினும்
முடிந்தால் உருவாக்கிக் கொள்
விஞ்ஞானமே.!

...



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரச் சுவர்.

நெருப்புக் கிணற்றுக்குள்
உப்பு நீரக் கடல்கள்
வழிகிறது உந்துதலில்..

பூட்டப்பட்ட உயிர்க் கதவினில்
நாட்டுக் குறிப்பின் நரகச் சாவிகள்
குலுக்கித் திறந்திட
முற்படுகின்றன..

கம்பத்தின் கிடங்கில்
தோலுரிக்கப்பட்ட ஒன்றைத் தசையில்
குதிக்கிறது வயிற்றுப்புண் நெருடல்..

இராத்திரி முட்கள்
சூரியத் தம்பியின் அம்பினை
கடன் கொண்டு
மொக்கு மரத்தில்
பாய்கிறது; அறிவிழந்த ஆசை..

கோடாரிக் கொம்புகள்
பச்சை நிறவுடை
மிருக நெஞ்சினில் குத்தி:
மண்ணை காற்றாய்
வாரிப்போடுகிறது..

படார்.. படார்.. சத்தக் கொதிப்பில்
படுத்துறங்கிய நாயின் நாக்கும்
வெளிக் காட்டுகிறது;
ஆமைத் தலையாய்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்த் தொங்கி கொள்ளாத
வாழை மரமாக
வேறிடம் விழைந்திட
ஊரொன்று வீசி நடக்கிறது
யுத்த சொற்களை.

காற்றில் குதித்து
தற்கொலை செய்யும்
உயிரலகில்
ஏப்பமிடுகிறது
செல்களில் பற்கோர்வைகள்.

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாட்கள் எண்ணப்படுகின்றது.

வையகம் வாழ்வோரெலாம்
கல்லறைக் கதவுதொட்டு
மோதவேண்டும் ஏதோவொரு நாள்..

விருப்பமோ, வெறுப்போ!
உயிர்ப்பறவையின் விரல்கள்
வானகம் தொட
சிறகு முளைக்கும்..

வேப்பங்காயாய் பதிலுரைப்பவனும்,
விஷப்பாம்பாய் நச்சு கக்குபவனும்,
தேன் சுவையுள்ளோராய் நடிப்பவனும்
இன்னும் பூமியில்
வாழ்ந்து சாகவிருக்கின்றான்.

பாவம் பூமியின் கடிகாரம்
நேரம் ஒதுக்கித்தான் கொடுக்கிறது;
இவர்களுக்கும்..



இன்னும் நிலம் சிவப்பீரம்
கசிந்து கொண்டால்!
மனிதரெம் இனத்திலேயே
விஞ்ஞானஆய்வு
தேவையில்லை.

தொப்புள், தொங்கும் அங்கம்
தங்குமிடம்
மறந்தே போய் விடும்.

சுடுகாட்டுக்குள்
எரிதனல் ஊற்றுவதற்கே
ருசி பார்த்திடும் விரல்களின்
வெப்பம்...

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குருதி


பூகக் கால்வாயின்
சுவர்த்தசைப் பகுதியில்
தூண்டிலிட்டும் சிக்காத
சந்தோசத் தாள்கள்
போகின்றன ஊர்க்கோலம்..

கதிரைக் கனவினையிருத்தி
அதன் மேல் மதயானை மயிர்களை
அழுத்திக் கொண்டு,
கத்திப்பட்டம் தின்னும் இரும்பு மனிதன்.

பனியேந்தும் நெருப்புத் தழுவலில்
புகையெனத் தாவும் காலில்லா காற்று
ஒன்றைச் சில்வண்டியில் குந்திய
ஊனத்தை நிரப்புகிறது..

தரையூன்றிய கற் சிலம்புகள்
கறுப்பூத்திய அடிவாரங்களை
காயப்படுத்துவதாய்
முளைக்க விழுகிறது; எட்டுக் கால்களை.

கண்ணாடி தேகத்துகள்கள்
என்றோவுடைந்து
யுத்தக் கருவுக்குள் நிறைந்து
காய்ந்திருக்கிறது;
உணர்வு வேர்களில்..



சிறைக் குருதி
வான் நீலம் படிந்து - அதை
மேகம் உறிஞ்சி
மீண்டும்
இரத்தத்துளிகளை பொழிகிறது;
சிவப்பு மழையென..

...



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிக்குள் விழுந்த பூ

என் மனக் கயிற்றில்
நீயேறி
இதயப் பள்ளத் தாக்கினில்
விழுந்து
கண்ணீருப்பாற்றில் நீந்தி:
காதல் படகெடுத்து - என்
கவிக்குள் நுழைகிறாய்..

மொத்த என் உணர்வினில்
மௌனச்சிறை பார்வை ஊசியேற்றி
சிவப்பு நரம்பினில்
நிறமழுத்துகிறாய்..

இறந்த காற்றில் எனை வீசி
திறந்த வெளியில் நீ நின்று
அகோரமாய் சிரிக்கிறாய்..



சாம்பல் காட்டுக்குள் தூவிய
காதல் இயந்திரத்தை கழற்றி விட்டேன்
நீ எங்கோ நிழல் தொடாமல்
தொலைகிறாய்.

ரகசிய மொழி கொட்டும்
உன் நுனிப்பாகங்கள் எனை வெட்டி
சோலை வன முட்களுக்குள்ளே
தூக்கி எறிகிறது..

நாணயத்தாளில் மறைந்திடும்
நரம்பிழை நூலாய் உனக்குள்
ஒழிந்திருக்கின்றேனே யெனை
கண்டுபிடிப்பாயோ..?

நான் போர்க்களம் விரையும்
முன்னெனக்கு - உன்
நிழல் தழுவும் காற்றசைவு
ஈரம் கொடு;
பூக்களைக் கொண்டு வாள் கூர்களில்
இதயம் வரைவேன்.

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. ஆர். மயூரன்

# மோக மழை

பனிதூவும் மேகம் கண்டு
பட்டிணத்து மலர்கள் நாணம் கொண்டு
நடையெடுக்கும் பாதையோரம்
நறுமணம் மோகம் வீசிச் செல்ல...

அவ்வழியிதற்காய்
சுற்றிடும் ஆண் பட்டாம் பூச்சிகள்
கண்டவுடன்
பூக்களுக்கு கண் முளைத்து
மெல்லென மலர..

புல்லில் தூங்கும் மெல்லிய
துளிராய்
ஆசைகள் அலையுடைத்து
இதழ் சுவைத்திட...

அப்பப்பா.. இதை தப்பப்பா
எனச் சொல்வோர்
எவருமுண்டோ..



பாண்டித்தியப் புலவனும்,
பட்டத்து மானிடனும்
மாதவள் தேனூறும் உதடுகண்
நீந்திக் கொள்ள
முத்தக் கடல் தேடுவர்..

கை இணையும் போதினிலே
இதயம் துள்ளிக் குதிக்க
விழி கொத்தும் பார்வையிலே
இரவை மெல்ல அள்ளிச் சொல்ல..

கற்பித்தான் வேண்டுமோ!
காதல் மோகம் தப்பித்திடல் ஏலுமோ.?

நூற்றாண்டு காலம் உடைந்து
நுனி விரல் தீண்டும் பொழுது
ஏற்றம் பெறும் இளமையின்
வினை எச்சம் இவைகள் தானோ.?

...



ஜே. ஆர். மயூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகின் வரியே

மலர்களே!
உன் பிரபஞ்ச அழகினை
மொத்தமாய்
வேரோடு அழித்திட
ஆயிரம் நிலவுகளாய்
வந்து போனாள் ஒரு பெண்..

இன்றுதான் என் விழிகள்
உயிர் பெற்ற தினம்.

இனி இந்த உலகச் செடியில்
பூக்கும் எந்தப் பூவும்
தோற்றுப் போகும்
அவளிடம்.



இரவு உடைத்து இரண்டே
துண்டுகள்
நெற்றிப் புருவம்..

இவள் அழகின் முன்
தோற்கவே அடம் பிடிக்கிறது!
என்பேனா.

இங்கே ஓர் அதிசயம்
அவள் விழிகளால்
வாசிக்கிறாள் - தாய்மொழி
மறந்தே போனது எனக்கு.

உன் இளமைதனை
களவாடிக் கொள்ள
ஆண் மேகங்கள் - உன்
வீட்டில் அடைமழையாய்
பொழிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ நடந்த சாலையோரம்
வெண்நிற பனித்துளிகள் - உன்
மூச்சின் வெப்பத்தால்
உயிர் பெறுகிறது.

அழகிய பெண்தீவே!
உன் விரலால் என் உயிர்ச் சுவரைத்
தண்டித்தால் கூட
மன்னிப்பேன் அதை தவணைமுறையாய்..

உன் பின்னால் காதல் நாய்கள்
குலைத்திடக் கூடும்
காமப் போர்வையில்..

உன் மனதுக்கு மட்டும்
காவல் மதிலாய்
நான் இருந்திடவா?

இந்த அழகான நிமிஷம் - அதை
அப்படியே உறையச் செய்வது
எப்படியென எனக்குள்
குழம்புகின்றேன் நான்.

இறுதியாய்!
என் மனம் பதிந்த – உன்
மஞ்சள் நிறம்
கொஞ்சம் வேர்த்திருந்தால்
என்னுயிர் உனைத் தீண்டியதாய்
எடுத்துக் கொள்கிறேன்.

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர்.21

வான்வெளி சுழன்ற
உலக மரணப் பந்தே!

பாவம் தொங்கிய
உயிரின் நாக்கில் - நீ
உரசிடாமல் போனது ஏன்.?



மனிதன் வாழ்ந்திட்ட காலம்
புண்ணியங்கள் மாய்ந்திட்டன.
பாவ அகராதிக்கும் மொழி தேடி
கண்டுபிடிப்புக்கள் தொடங்கிவிட்டன.

"நல்லதென்பே இங்கில்லை."

மொழி மதங்களுக்குள்ளும்
முரண்பாடு
கதிரைக் கால்களின் நுனியின்
வெடிகுண்டு.

இயந்திரம் துப்பிய
உடன்படிக்கை காகிதத்தில்
கற்பழிப்பும், கொலையும்.

உன் போல் ஆசைக்கற்கள்
பார்வை விளிம்பில்
மனிதரிலும் சுழல்கின்றன..

பஸ்வண்டிக்குள் பாறையாய்
மனம் காட்டும் குரங்குகள்
தாவுகின்றன
வெள்ளைப் பிரம்பின்
பார்வையும் அழிகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நெருப்பாய் கொதித்த நீயும்
பனியாய் உருகியதேன்:
மீண்டும், மறுபடியும்
ஆதிக்கத்தை நிலைகுலைத்து.

பூமிப் பந்தின் காற்றைத்
திறந்துவிடு
திசை மாறிடாமல் மோதிக்கொள்.


உலகாசை கடல் நீந்தும்
முதலைகளின் கண்ணீர்கள்
வடிகட்டப்பட வேண்டும்

கடவுள்
இல்லையென வாதிடுபவன்
முழந்தாட்படியிடல் வேண்டும்..

முட்களின் சுவாசங்கள்
பாலைவன வெய்யிலில் பூவாய்
பூத்திடல் வேண்டும்..

தனியுலகம் மீண்டும்
ஒழிந்து கொள்ளாமல்
பொழிந்திட வேண்டும்
உன் சுழற்சியில்..

...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பெழுத்துக்கள்

இதயம் கரைக்கும்
என்னவளுக்கு!
இதையும் கரை..

உன்
ஞாபகக் கனவுகளால்
மனம் புதைந்த உன்னவன்
தெரிவிப்பது!

"அன்பே" — எப்படி நலம்!
ஏதோ உணர்கிறேன்:
என் உயிரின் அடி நுனியை
பிடித்த வண்ணம்
அலைகின்ற
உன் கண்கள் சுகமா.?



என் நெஞ்சின் காதல் குழிக்குள்
நிரம்பி வழிந்த ஆசை தின்கிற
உன்னிரவின்
இளமைகள் நலமா.?

இன்னும் உதிராமல் பூக்கும்
உன் உதட்டோர இனிப்பூக்களாயான
என் இதழ்பதிந்த
முத்தங்கள். தரவா.?

சொல்!
அவ்விடத்து ஈரத்தின்
நொடியில்
மொத்தமாய் வாழ்ந்திடக் கூடும்
என் நினைவு.

பல நாட்களோ! இறக்கை கொழுவி
பறந்து விட்டன;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பாதத்தடம்
மற்றும் பார்வை
வாழ்கின்றன உன்னை
எனக்குள் ஊற்றியபடி.

உன் காதல் வேலி
என்னைச் சிறையிட்டுக்
கொல்வதை விரும்புகிறாய் - ஆனால்
உன் விரல் தொட்டு
விடுதலை வழங்க மறுக்கிறாய்.

சரி..சரி இம்மடல்
உனை மலர்களாய்ச்
சூடும் வரைக்கும்
அழகின்றியே போகட்டும்.

ஆயினும் ஆயிரம்
அர்த்தங்களின் வலிகளை
அனுபவிக்கிறது இது.

உயிரெழுத்தும்.
மெய்யெழுத்தும் - என்
உணர்வுகளை உடுத்திக்
கொள்ளாமல் நிர்வாணமாய்
இருந்திடக் கூடும்.

நீ தாமதியாமல்
உன் விழி மனப்போர்வைகளால்
எழுத்தினைப்
பொறுக்கிக் கொள்ளும் போது;
உன் கண்ணீர்க் குமிழ்களிலுள்ளே
இதயம் வழுக்கி விடவும்
கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இதயத்தின் வலியை
அப்புறப்படுத்தி
அரசாளும் என் வரிகள்.

சூரியன் தூங்கிக் கொள்ள
மேகங்கள் இரவினை
மெத்தையாய்
தைத்து விட போகின்றது;
அதற்குமுன்
சிவப்பு வாய்க்குள்ளே
மெதுவாய் இறக்குகிறேன்
என் மடலை..

கை வந்ததும்
பொய் கொண்ட தாயினும்
அனுப்பி விடு
உன் பதிலை..

குறிப்பு!
எழுத்தினிடைவெளியில்
என் இனிதான முத்தங்கள்
உன் இதழுக்கு மட்டும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாற்காலிக்கு ஒரு கேள்வி

இதய விளிம்பில் தொங்கும்
மனக் கம்பிகள்
தொடுகின்றன
தேதிகளை..

விரல் தீயின் வெப்பம்
பணக் கழுகுகளின்
கண்களில் சிக்கி
சாம்பற் புழுதிகளாய் மிதக்கின்றன.

கண்களில்
வருங்காலக் கனவினை
குத்தகைக்குப் பெற்று,
வெற்றுக் கைகளோடு
வீதியில் இறங்குகின்றார்கள்
கறுப்பு மீசை முளைத்த மனிதர்கள்.

மீசை கொடுத்த வேகமும்,
வெற்றுப் பாக்கெட்
கொடுத்த கோபமும்
திசைகளை மாற்றிக் கொள்ள
சந்தர்ப்பம் கொடுக்கிறது
இவர்களுக்கு..



வேலையற்ற திண்டாட்டத்தில்
வீதியில் இருந்து
வயிற்றுக் குடலுக்காய்
பேட்டியெடுகின்றது
பசி..

நேர்மைக் கிண்ணத்தில்
விழவிரும்பும் பலரும்
சோக கிண்ணத்தில்
தோய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. ஆர். மயூரன்

படித்த கல்வி கொடுத்தது.
பட்டம்
அதனால் என்னவோ
வயதும்
வேலையில்லாத பொழுதினில்
பட்டமாய் பறக்கிறது.

நொண்டிக் குதிரையாய்
அறிவு தைத்தவனுக்கு
சந்தர்ப்பம் கொடுக்கிறது
அரசியல் நாற்காலி..

முழுமையில்லா
மடையர்களுக்கும் விழுகிறது
தேர்தல் வாக்கு. - அதுவும்
முட்டைக்கும், பாலுக்கும்
இப்போது வேலைக்கு..

தலைமுடி பிசுபிசுப்பில்
காலம் கண்விழித்து தத்துவம்
பேசினாலும்:
கற்றவரிலும் சிலர்
தூக்குகின்றார்கள்
மூட்டை.

ஓட்டுக்களின் எண்ணிக்கைகளை
பார்க்கின்றார்கள்
ஓலைக்குடில் வாழ்கிற
நம் நாட்டு
அறிவாளிகளைப் பார்த்திட
மறப்பதேன்.?

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்ச் சிலம்பு

உடற் குழாய் கிணறுகளைத்
தோண்டுகிறார்கள் ;
பாழ் கிணற்றுக்குள்
சமூகத்தின்
சாக்கடை குப்பைகளை
இறைக்காமல்..

...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி...



## மயூரன்! வளர்ந்துவரும் இளங்கவிஞர்!

என் இனிய தோழரும், இளம்கவிஞருமான
ஜே.ஆர்.மயூரனின் மூன்றாவது
கவிதை நூல் இந்த மனப்பூக்கள்.

மன்னார் சாவற்கட்டு கிராமத்தைச் சேர்ந்த இவர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியின் பழைய மாணவர்.

இது மயூரனின் மூன்றாவது பிரசவம்! ஆம் இலக்கிய பிரசவம்!
ஏற்கனவே ' வருடிய இளமைக் காற்று ' (2010),
' நிழலில்லா தடயங்கள் ' (2011) ஆகிய புதுக்கவிதை நூல்களைத்
தந்த மயூரன் இப்போது தனது மூன்றாவது படைப்பாக
' மனப்பூக்கள் ' என்ற கவிதைத் தொகுதியை
வெளிக்கொணர்கின்றார்.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தபோதிலும் எல்லோரிடமும் சமத்துவமாக இணங்கிபோகும் குணம் கொண்ட ஓர் சிறந்த இலக்கிய படைப்பாளியும் கூட. இவரின் தமிழுரசும் கவிப்பணி தொடர வாழ்த்திநிற்கின்றேன்.

தோழமையுடன் ...
மக்ஸ்நாதர்
ஆளுநர் விருத்தாளர், வடமாகாணம்.

ISBN 978 - 955 - 52528 - 2 - 9

Printed by: Sky Printers, Mannar. Tel: 023 2222446.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org